# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 148 | செவ்வாய்க்கிழமை Tuesday | 25.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ஆண்டிற்கு 3 விலையில்லா சிலிண்டர்கள், அனைத்து பேருந்துகளிலும் மகளிருக்கு இலவச பயணம்; முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: ஆண்டுக்கு மூன்று இலவச சமையல் சிலிண்டர் திட்டம் வருகின்ற 2027 பொங்கல் பண்டிகை நாளில் இருந்து அமலுக்கு வருவதாக முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதமானது கடந்த ஆகஸ்ட் 17 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. அதன்படி, இரண்டு நாட்கள் விடுமுறையை அடுத்து (ஆகஸ்ட் 24) காலை 9.30 மணிக்கு மீண்டும் சட்டப்பேரவை தொடங்கியது.

அப்போது பேரவையின் 110 விதியின்கீழ் த மி ழ் ந ா டு முதலமைச்சர் விஜய், விலையில்லா சமையல் சிலிண்டர் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த அறிவிப்பின்படி இ ல் ல த் த ர சி க ள ா ல் ஆண்டுக்கு மூன்று சமையல் சிலிண்டர்களை கட்டணமில்லாமல் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், இந்த திட்டம் வருகின்ற 2027 பொங்கல் முதல் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்பட இருப்பதாக முதலமைச்சர் விஜய் தெரிவித்தார்.

'அன்னபூரணி சூப்பர் 6' என்கிற திட்டத்தின்கீழ் விலையில்லா சமையல் சிலிண்டர் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.இந்ததிட்டத்திற்காக ஆண்டுக்கு ரூ. 4 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 1 கோடியே 38 லட்சத்து 16 ஆயிரத்து 104 குடும்பங்கள் பயன் பெறுவார்கள் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஆண்டுக்கு ரூ. 2.5 லட்சம் வருமானம் உள்ள, பொருளாதாரத்தில் பின் த ங் கி யு ள் ள குடும்பத்தினர், சிறு மற்றும்குறுவிவசாயகுடும்பத்தினர், மாற்றுத் திறனாளி குடும்பத்தினர் இந்த திட்டத்தின் வாயிலாக பயனடைவார்கள் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

விலையில்லா சமையல் சிலிண்டர் எப்படி பயனாளியை வந்து சேரும்?

பயனாளிகள் எரிவாயு சிலிண்டர் பதிவு செய்து சிலிண்டர் பெற்ற பின்னர், எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து பட்டியலைப் பெற்று சி லி ண் ட ரு க் க ா ன விலையை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

இ த் தி ட் ட த் ை த தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருதாக முதலமைச்சர் விஜய் சட்டப் பேரவையில் குறிப்பிட்டார். த.வெ.க வெளியிட்ட முக்கியமான தேர்தல் அறிக்கைகளில் ஒன்றாக விலையில்லா சமையல் சிலிண்டர் உள்ளது. இந்த அறிவிப்பை இன்று முதலமைச்சர் விஜய் தமிழ்நாடு சட்டப்பேரவையில் வெளியிட்டது இல்லதரசிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டம் 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில் காந்தியடிகள் பிறந்த நாளான அக்.2ம் தேதி முதல்விரிவாக்கம்செய்யப்படும். முதற்கட்டமாக மாநகரம், நகரப் பகுதிகளில் இயங்கும் Express, LSS, டீலக்ஸ் (Deluxe) அரசுப் பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லா பயணங்கள் மேற்கொள்ளலாம். பரந்தூர் விமான நிலையம் அமைக்க கூடாது என போராடிய மக்களுடன் உறுதியாக நிற்கிறேன். நீண்ட நாட்களுக்கு மேலாக இந்த திட்டத்திற்கு எதிராக போராடிவரும் விவசாயிகளுக்கு எனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு, இந்த விவசாய நிலங்களை பாதுகாக்க இந்த மக்கள் போராடி வருகிறார்கள். விக்கிரவாண்டியில் அக்டோபர் 2024 நடந்த பொதுக் கூட்டத்திலேயே பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறேன். தொழில் வளர்ச்சி மற்றும் அதற்கான விமான நிலையங்களின் பங்கு பற்றி நான் நன்கு அறிவேன். அதற்கான என்னுடைய முழு ஆதரவும் உண்டு. ஆனால் பரந்தூரில் இந்த திட்டம் அமையக்கூடாது.

மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் (Mofussil) மற்றும் மலைப் பகுதிகளில், சாதாரணக் கட்டண பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லா பயணங்கள் மேற்கொள்ளலாம். வருமான உச்சவரம்போ மற்றும் மேற்கொள்ளவிரும்பும் பயண எண்ணிக்கையிலோ கட்டுப்பாடுகள் இல்லை. திருநரும் (Transgender) கட்டணமில்லா பயணங்கள் மேற்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# பரந்தூர் விமான நிலையத்தைக் கைவிடுவது தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கும்; தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கண்டனம்

பரந்தூர் விமான நிலையத்தைக் கைவிடுவது தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் படுகுழியில் தள்ளிவிடும் என்று மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:-

பரந்தூர் பன்னாட்டு விமான நிலையத் திட்டத்தைக் கைவிடுவதாக மாண்புமிகு தமிழ்நாடு முதல்-அமைச்சர்இன்று வெளியிட்டுள்ள அறிவிப்பு மாநில வளர்ச்சியைப் பல ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிடும்.

அற்ப அரசியல் காரணங்களுக்காகத் தமிழ்நாட்டின் நலனை அடகு வைக்கக்கூடாது.மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை விதி எண் 110-ன் கீழ் அறிவித்துவிட்டு விவாதத்துக்கோ கருத்து தெரிவிக்கவோ கூட இடமில்லாமல் செய்திருப்பது சரியல்ல. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி, ஆட்டோமொபைல் என சகல துறைகளிலும் முதலிடம் வகிக்கும் தமிழ்நாட்டின் தலைநகரில் உலகத் தரத்திலான ஒரு விமான நிலையம்அமைவது மிக மிக அவசியமானது. அதை வேண்டாம் என மறுத்திருப்பது மாற்றமல்ல; பெருத்த ஏமாற்றம்! சாத்தியமுள்ள அனைத்து மாற்று இடங்களையும் கவனமாகப் பரிசீலித்த பின்புதான் பரந்தூர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நிலம் கையகப்படுத்தலும் நிறைவடையும் தறுவாயில் உள்ளது. பலகட்டப் பணிகள், ஒப்புதல்கள் நிறைவடைந்த நிலையில் ஆட்சிக்கு வந்ததும் கட்டுமானம் விரைந்து தொடங்கப்பட பல திட்டங்களை நாங்கள் வைத்திருந்தோம். தற்போது அமைந்துள்ள புதிய அரசு மீண்டும் வேறு இடத்தைத் தேர்வு செய்துபணிகள்தொடங்குமுன், தமிழ்நாட்டின் வளர்ச்சியே மொத்தமாக குறைந்துவிடும்.

முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக திராவிட மாடல் ஆட்சியில் இருந்த தமிழ்நாடு கடைசி இடத்துக்குத் தள்ளப்படும். முதல்-அமைச்சரின் அறிவிப்பு நம் போட்டி மாநிலங்களுக்கு அடித்த ஜாக்பாட். தொழில் வளர்ச்சி இல்லாமல் ஒரு ட்ரில்லியன் டாலர், ஒன்றரை டரில்லியன் டாலர் என்ற பொருளாதார வ ள ர் ச் சி இலக்குகள் சாத்தியமே இல்லை.



## தமிழ்நாட்டில் முதல்முறையாக கும்பமேளா நடப்பதற்கு ஆலோசனை கூட்டம்





தமிழ்நாட்டில் முதல்முறையாக கும்பமேளா நடப்பதற்கு 24.08.2026 அன்று காலை 11 மணிக்கு ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்தியா முழுமைக்கும் கலந்து கொள்வதாக பேசப்பட்டது. ஸ்ரீ யோக சித்தரும் மற்றும் மண்டலீஸ்வரர் டெல்லியில் இந்தக் கூட்டம் தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தென்காசி மாவட்டம்இலஞ்சி TDTA DS டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் பள்ளி கல்வித் துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இடையிலான மாவட்ட அளவிலான இளையோர் திறன் 2026 2027கலைத்திருவிழாபோட்டிகளில்மாவட்டஆட்சியர்ரஞ்ஜீத்சிங்,மாணாக்கர்களின்படைப்பாற்றலைபார்வையிட்டார்

# சுரண்டை நகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நகரச் செயலாளர் அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது



சுரண்டை நகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நகரச் செயலாளர் அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. முன்னாள் தொகுதி செயலாளர் கோல்டன் செய்யது அலி பாதுஷா, முன்னாள் தொகுதி இணை செயலாளர் ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் திவான் ஒலி,மாவட்ட அமைப்புச் செயலாளர் அப்துல் பாசித்,

மாவட்ட பொருளாளர் செய்யதுஅலி பாதுஷா அவர்கள் கலந்து கொண்டனர். ஆனைகுளம், பாபநாசபுரம், சாம்பவர் வடகரை ஆகிய கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட தலைவர் முன்னிலை யில் நகர நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.நகரத் தலைவராக ஜாகிர் உசேன், நகர செயலாளராக அமல்ராஜ், பொருளாளராக பொறியாளர் சித்திக், தொழில்நுட்ப பிரிவு நகர ஒருங்கிணைப்பாளர் சாகுல் ஹமீது ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் கட்சியின் வளர்ச்சி குறித்தும், கிளை நிர்வாகிகளின் செயல்பாடுகள் குறித்தும் , கட்சியின் இளைஞரணி ( Young Democrats ) நிர்வாகிகள் தேர்வு செய்வது குறித்தும், WIM மகளிரணி நகர கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது

டெங்கு காய்ச்சல் பரவி வருவதால் சுரண்டை நகராட்சி நிர்வாகம் கூடுதல் கவனத்துடன் கொசுவை ஒழிப்பதற்காக,கழிவுநீர் ஓடைகளில் தங்கியுள்ள குப்பை மேடுகளைஅகற்றிசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்,

கட்சியின் கட்டமைப்பை பலப்படுத்த வேண்டி புதிய உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் எனவும், வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் சுரண்டை நகரில் அதிக இடங்களில் எஸ்டிபிஐ கட்சிபோட்டியிடவேண்டும் என்று கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

முடிவில் தொழில்நுட்பபிரிவு நகர ஒருங்கிணைப்பாளர் சாகுல் ஹமீத்சுப்ரீம் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேற்றது.

# கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நல்லாமூர் ஊராட்சியில் காஞ்சி மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் வழக்கறிஞர் அவர்களின் ஆலோசனைப்படி இலவச கண் மருத்துவ முகாம். நடை பெற்றது

இந்த சிறப்பு வாய்ந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட நபர்களுக்கு கண்புரை மற்றும் பார்வை குறைபாடு உள்ளவர்களை தேர்ந்தெடுத்து இலவசமாகமூக்கு கண்ணாடி முன்னாள் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய பொருளாளர் நல்லாமூர் S.ரமேஷ் தேமுதிக அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டது இதில் கட்சியின் தேசிய முற்போக்குதிராவிட கழகம் மதுராந்தகம் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் அவர்களும் மதுராந்தகம் முன்னாள் தெற்கு ஒன்றிய செயலாளர் சம்பத் முதுகரை மதுராந்தகம் முன்னாள் தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் vs. சேகர் பி எஸ் வெட்டுக்காடு ஒன்றியமாவட்ட பிரதிநிதி கோதண்டராமன். கோபி திருநாவுக்கரசு மற்றும் 190 நல்லாமூர் கிளை s. சக்திவேல். பாலு ரவிந்தர். விஜயகுமார். கோவிந்தராஜ். முருகன் . நாராயணசாமி

.ஏழுமலை உள்ளிட்ட நல்லாமூர் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# “பரந்தூர் திட்டம் ரத்தால் தமிழக வளர்ச்சி 10 ஆண்டுகள் தாமதிக்கும் அபாயம்...” அண்ணாமலை பேச்சு



சென்னை: பரந்தூர் இரண்டாவது விமான நிலையத் திட்டம் கைவிடப்பட்டதால் தமிழகத்தின் வளர்ச்சி குறைந்தது 10 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளப்படும் என்றும், புதிய இடத்தை தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று வி தி லீடர்ஸ் அமைப்பின் நிறுவனர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், "இன்றைய தினம் சட்டப்பேரவையில், தமிழக முதல்வர் விஜய், பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை தமிழக அரசு கைவிட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார். சென்னையின் இரண்டாவது விமான நிலையத்துக்காக வேறு சில இடங்கள் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால்,புதிய இடம் எது என்பதையும் முதல்வர் அறிவித்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஏனெனில், இரண்டாவது விமானநிலையத்திற்கான இடத்தைத் தேர்வு செய்யத் தாமதப்படுத்துவதால், தமிழகத்தின் வளர்ச்சி குறைந்தது 10 ஆண்டுகள் தாமதிக்கும் அபாயம் உள்ளது. பரந்தூர் திட்டத்துக்கு மாற்றாக வேறு இடத்தில் இரண்டாவது விமான நிலையத்தை அமைக்க தமிழக அரசு நிர்வாக ரீதியாக முடிவெடுத்தாலும், புதிய இடத்தைத் தேர்வு செய்வது, மத்திய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட சட்டப்பூர்வமான அனுமதிகளைப் பெறுவது, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது, நிலம் கையகப்படுத்துவது, தேவையான உரிமங்கள் பெறுவது என, விமான நிலையம் செயல்பாட்டுக்கு வர குறைந்தது 10 ஆண்டுகள் ஆகலாம். அதற்குள் மற்ற மாநிலங்கள்வேகமாகமுன்னேறிக் கொண்டிருக்கும் நிலையில்,தமிழகம்பின்னுக்குத் தள்ளப்படும்.



# கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள கற்பகம் பல்கலைக்கழக வளாகத்தில், கல்லூரி மாணவ, மாணவியர்களால் கொண்டாடப்பட்ட திருவோன திருவிழா நிகழ்ச்சி

கோவை ஈச்சனாரி பகுதியில் கற்பகம் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.இங்கு சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வு பயின்று வருகின்றனர் இங்கு, தமிழகம் மட்டுமின்றி கேரள மாநில இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களும் கல்வி பயின்று வருகின்றனர். இக்கல்லூரியில் மாணவர்களிடையே ஒற்றுமை, சகோதரத்துவத்தை மேம்படுத்த அனைத்து மாநில நிகழ்வுகளையும், திருவிழாக்களையும் கல்லூரி வளாகத்தில் நடத்துவது வாடிக்கையான ஒன்று. இதன் ஒரு பகுதியாக கேரளாவின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மாணவர்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் கல்லூரி வளாகத்தில் திருவோனன திருவிழா கொண்டாட பட்டு வருகின்றது. இதற்காக கல்லூரியில், பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. ஓணம் பண்டிகையின் பாரம்பரிய சிறப்புகளை மாணவர்கள் அறிந்து கொள்ளவும், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவ உணர்வை வளர்க்கவும் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது."நமது பாரம்பரியத்தை ஒரே குடும்பமாக இணைந்து கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்துடன் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகமாக பங்கேற்கின்றனர். கற்பகம் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் ரவி, பதிவாளர் டாக்டர் பிரதீப், ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கற்பகம் கல்லூரியின் டீன்ஸ் அமுதா, ராகவி, குமுதா, கதிரவன், ஜனக மாயதேவி, உள்ளிட்டோர் செய்து இருநத்தனர். இந்த விழாவில் கல்லூரி மாணவ மாணவியர்கள் சுமார் 5000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, மாவேலி மன்னனின் வரவேற்பு நிகழ்ச்சியுடன் துவங்கிய விழாவில் கேரள மக்களின் பாரம்பரிய இசையான சென்டை மேளங்கள் முழுங்க, கல்லூரி மாணவ மாணவியர்கள், அத்தப்பூ கோலமிட்டு, சேன்டைமேள இசைக்கு ஏற்றவாறு மாணவிகள் நடனமாடினர் இதனால் கல்லூரி வளாகமே திருவிழா போல காட்சியளித்தது வருகிறது.

# கோவையில் பி.எஸ்.ஜி. 60 ம் ஆண்டு கோப்பைக்கான ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்கும் அகில இந்திய கூடைப்பந்து போட்டிகள் ஆகஸ்ட் 26 ஆம் தேதி துவங்குகின்றது



கோவையில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் பி.எஸ்.ஜி கோப்பைக்காண அகில இந்திய கூடைப்பந்து போட்டிகள், 60 ஆம் ஆண்டு அகில இந்திய கூடைப்பந்து போட்டிகளாக வரும் ஆகஸ்ட் 26 ஆம் தேதியிலிருந்து, 30 ஆம் தேதி வரை 5 நாட்கள் நடைபெற உள்ளது. இதுகுறித்த செய்தி வெளியீட்டு நிகழ்ச்சி கோவை பிஎஸ்ஜி கல்லூரி வளாகத்தில் இன்று நடைபெற்றது.அப்பொழுதுகோவை பிஎஸ்ஜி கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், மற்றும் பி.எஸ்.ஜிஸ்போர்ட்ஸ்கிளப் தலைவர்,முனைவர் ருத்ர மூர்த்தி ஆகியோர் கூறியதாவது.. கோவை மாவட்டத்தில் கூடைப்பந்து போட்டிகள் மிகவும் பிரபலமாகி வருகின்றது.நமது மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், மற்றும் வீராங்கனைகள் சிறப்பாக பயிற்சி பெற்று, மாநில அளவிலும், தேசிய அளவிலும் சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றனர். இதன் மூலம் அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், போன்றவற்றில் வேலைவாய்ப்பும்கிடைக்கின்றது. இதனை ஊக்குவிக்கும் வகையில், பிஎஸ்ஜி நிறுவனம் தொடர்ந்து 59 ஆண்டுகளாக இந்த போட்டிகளை நடத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக 60வது ஆண்டை நினைவு கூறும் வகையில் இந்த ஆண்டு முதல் பெண்களுக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டிகளும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த போட்டிகளில் இந்திய அளவில் புகழ்பெற்ற சிறந்த அணிகள் பங்கு பெற்று விளையாட உள்ளது, இப்போட்டியில் வெற்றி பெறும் ஆண்கள் அணிக்கு முதல் பரிசாக ஒரு லட்ச ரூபாயும் சுழல் கோப்பையும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 40,000 ரூபாயும், 4-ம் இடமாக 30 ஆயிரம் ரூபாயும், சிறந்த விளையாட்டு வீரருக்கு பத்தாயிரம் ரூபாயும் வழங்கப்பட உள்ளது. அதேபோல பெண்களுக்கான போட்டியில் முதல் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், சுழல் கோப்பையும், இரண்டாம் பரிசாக 50,000 ரூபாயும், கோப்பையும், மூன்றாம் மற்றும் நான்காம் அணிகளுக்கு தலா 25,000 மற்றும் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கு பத்தாயிரம் என மொத்தமாக நான்கு லட்சத்து 35 ஆயிரம் பரிசு தொகையாக வழங்கப்பட உள்ளது. இந்த விளையாட்டுப் போட்டிகளை பாரத ஸ்டேட் வங்கியின் கோவை மண்டல மேலாளர் காயத்ரி மற்றும்,தமிழக விளையாட்டு மேம்பாட்டு துறையின் அமைச்சர், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாககலந்து கொண்டு துவக்கி வைக்க உள்ளதாக தெரிவித்ததுடன், சக்தி நிறுவனங்களின் தலைவர் மாணிக்கம், சிஆர்ஐ பம்ப்ஸ் நிறுவனங்களின் நிர்வாக இயக்குனரும், கோவை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் தலைவருமான செல்வராஜ் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தனர்.

# கடந்த இரு தினங்களுக்கு முன்னர், அதிக ஒலி எழுப்பியவாறு, சாலையில் இயக்கபட்ட பேருந்தின் வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆனதை தொடர்ந்து மாநகர போக்குவரத்து காவல்துறையினர் அதிரடி சோதனை



கோவை காந்திபுரம் மத்திய பேரூந்து நிலையத்தில் இருந்து, வெளியே வரும்தனியார் மற்றும் அரசு பேருந்துகளில், காற்று ஒலிப்பான் என்றழைக்கபடும் ஏர் ஹார்ன் பொருத்த பட்டுள்ளதா என போக்குவரத்து காவல்துறையினர் திடிரென ஆய்வு செய்தனர். இதில் சுமார் 100க்கும் மேற்பட்ட பேருந்துகளில் சோதனை நடத்தினர். இதில், சுமார் 30க்கும் மேற்பட்ட பேருந்துகளில் ஏர் ஹார்ன் பொருத்த பட்டிருந்த நிலையில், அனைத்து பேருந்துகளுக்கும் அபராதங்கள் விதிக்க பட்டதுடன், ஏர் ஹாரன்களை பறிமுதலும் செய்தனர்

. இது குறித்து போக்குவரத்து காந்திபுரம் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சுபா கூறியதாவது..

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் அதிக காற்று ஒலிப்பான் என்று அழைக்கப்படும் ஏர்ஹாரன் ஒலித்தபடி, தனியார் பேருந்து கோவையில் இருந்து திருப்பூர் நோக்கி,சென்று கண்டிருந்தது, அதனை சக வாகன ஓட்டிகள், வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர். இதனை கண்ட கோவை மாவட்ட காவல் ஆணையர் கண்ணன்,

போக்குவரத்து துணை ஆணையர் மகேஷ்வரனுக்கு ஏர் ஹார்ன் பொருத்த பட்டுள்ள பேருந்துகளை பிடிக்க உத்தரவிட்டார். இந்த உத்தரவின் பேரில் கோவை காந்திபுரம் போக்குவரத்து உதவி ஆய்வாளர் சுபா, சிறப்பு உதவி ஆய்வாளர் அர்த்தநாரி மற்றும் காவலர்கள் 5 பேர் கொண்ட குழுவாக இணைந்து இந்த சோதனையை செய்து, அபராதம் விதிப்பதுடன், ஏர் ஹார்ன்களை பறிமுதலும் செய்து வருவதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோவை ஆலாந்துறை பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காமாட்சியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது

சிரவை ஆதீனம் இராமானந்த குமரகுருபர சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவையொட்டி, கடந்த சில் நாட்களாக கோவில் வளாகத்தில் பல்வேறு சிறப்பு பூஜைகள், யாகசாலை பூஜைகள் மற்றும் வேத பாராயணங்கள் நடைபெற்றன.

விழாவின் முக்கிய நிகழ்வாக, புனித நதிகளில் இருந்து எடுத்து வரப்பட்ட சுமார் 2 ஆயிரம் தீர்த்தக் குடங்கள் ஊர்வலமாக கோவிலுக்கு கொண்டு வரப்பட்டன. பக்தர்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் புனித நீர் அடங்கிய கலசங்களை சுமந்தபடி கோவில் விமான கோபுரத்தை வலம் வந்தனர்.

தொடர்ந்து யாகசாலை பூஜைகள் நிறைவடைந்ததை அடுத்து, வேத மந்திரங்கள் முழங்க கோவில் விமான கோபுர கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

புனித நீர் கலசங்களின் மீது ஊற்றப்பட்டபோது, அங்கு திரண்டிருந்த பக்தர்கள் பக்தி பரவசத்துடன் அம்மனை வழிபட்டனர்.


கும்பாபிஷேகத்தை தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ காமாட்சியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது. இதேபோல் கோவில் வளாகத்தில் உள்ள பரிவார தெய்வங்களுக்கும் புனித நீர் ஊற்றி சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன.

கும்பாபிஷேக விழாவில் ஆலாந்துறை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பெண்கள் ஆயிரக்கணக்கான சீர்வரிசை தட்டுகளுடன் ஊர்வலமாக சென்று காமாட்சி அம்மனுக்கு படைத்து சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவையொட்டி கோவில் வளாகம் முழுவதும் பக்தர்கள் கூட்டத்தால் களைகட்டியது. பக்தர்களின் வசதிக்காக பல்வேறு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன- கும்பாபிஷேக விழாவை தொடர்ந்து நடைபெற்ற மகா அன்னதானத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு உணவருந்தினர்.

விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர், மற்றும் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# இஸ்லாமிய சிறைவாசிகளின் மரணம் தான் விடுதலையா? அரசுக்கு காயல் அப்பாஸ் கேள்வி





இஸ்லாமிய சிறைவாசிகளின் மரணம் தான் விடுதலையா ,தமிழக அரசுக்கு மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் கேள்வி ஏழுப்பியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழக சிறைகளில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பாவி இஸ்லாமியர்கள் தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இஸ்லாமிய சிறைவாசிகள் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கடுமையான நோயினாலும் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றனர். மேலும். சிறைவாசிகளின் விடுதலை ஒட்டு மொத்தம் தமிழக இஸ்லாமியர்களின் எதிர்ப்பார்காக இருக்கின்றன என்பதை இந்த அறிக்கையின் வாய்லாக தெரிவித்து கொள்கிறோம்.

மேலும்.15 ஆண்டுக்கும் மேலாக சிறை தண்டனை யை அனுபவித்து வரும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும் என தமிழக சட்ட மன்ற உறுப்பினர்கள் ஜவாஹிருல்லா - தமிமுல் அன்சாரி போன்ற இஸ்லாமிய அமைப்புகள் தொடர்ந்து ஆளும் அரசுகளுக்கு கோரிக்கையே முன் நிறுத்தி குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால் சிறைவாசிகள் விடுதலை சம்பந்தமாக இவர்கள் வைக்கும் கோரிக்கைக்கு ஆளும் அரசுகள் செவி சாய்க்காமல் கடந்து சென்று போவது ஏன்?

மேலும் .இளமையில் சிறைக்கு சென்ற இஸ்லாமிய சிறைவாசிகள் முதுமை ஆகியும் அவர்களை கருணையின் அடிப்படையில் விடுதலை செய்ய முன் வராதது ஏன்?மேலும்.சிறைவாசிகளை விடுதலை செய்வதற்க்கான அனைத்து அதிகாரமும் தமிழக அரசுயிடம் இருக்கின்றன.அப்படி இருக்க இஸ்லாமிய சிறைவாசிகளின் விடுதலை மட்டும் தொடர்ந்து கேள்வி குறியாகவே இருந்து வருவது ஏன்?

ஆகவே : 15 ஆண்டுக்கும் மேலாக தமிழக சிறைகளில் தண்டனையை அனுவித்து வரும் இஸ்லாமிய சிறைவாசிகளின் உடல் மற்றும் அவர்களின் குடும்பத்தின் நலனை கருத்தில் கொண்டு மறு வாழ்வு கொடுக்கும் வகையில் சட்ட பிரிவு என் 161ன் படி சிறையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் சார்பாக தமிழக அரசை வலியுறுத்தி கேட்டு கொள்கிறோம். இவ்வாறு காயல் அப்பாஸ் கூறியுள்ளார்.

# கரூர் சமூக நீதி விடுதியில் தரமற்ற உணவு வழங்குவதாக புகார் அமைச்சர் வன்னி அரசு அதிரடி நடவடிக்கை





கரூர்:

கரூர் சமூக நீதி விடுதியில் தரமற்ற உணவு வழங்கப்படுவது குறித்து வீடியோ வெளியிட்ட மாணவர்களுடன் அமைச்சர் வன்னி அரசு வீடியோ காலில் அழைத்து பேசி அவர்களது தேவைகளை கேட்டறிந்தார்.

கரூர் மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள அரசு சமூக நீதி விடுதியில் கரூர் தாந்தோணிமலை அரசு கலைக் கல்லூரியில் பயிலும் 105 மாணவர்கள் தங்கியுள்ளனர். விடுதியில் வழங்கப்படும் உணவு தரமற்ற முறையில் உள்ளதாகக் கூறி மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் நேற்று வீடியோ வெளியிட்டனர்.

அதில், கரூர் காந்திகிராமம் பகுதியில் உள்ள சமூக நீதி விடுதியில் (பட்டியலின மாணவர் விடுதி) வழங்கப்படும் உணவு சாப்பிட முடியாத வகையில் மோசமாக உள்ளதாகவும்,சமூகநீதி அமைச்சர் வன்னி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றதகவலைடைப் செய்து வீடியோவுடன் பதிவிட்டிருந்தனர்.

இதையடுத்து ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் செந்தில்ராஜ், கரூர் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் எஸ்.பிரகாஷ், விடுதி காப்பாளர் ஆகியோரிடம் நேற்று விசாரணை நடத்தினார்.

மேலும், சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு வீடியோ வெளியிட்ட மாணவர்களை வீடியோ கால் மூலம் அழைத்து தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

மாணவர்களின் தேவையை உடனடியாக சரிசெய்துதீர்வுகாணும்படி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக சமூக நீதி அமைச்சர் வன்னிஅரசுதனதுஎக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.இது குறித்து கரூர் மாவட்ட ஆதிதிராவிட நலஅலுவலர் எஸ்.பிரகாஷ் கூறும்போது,"ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் செந்தில்ராஜ் இது குறித்து கேட்டறிந்தார். அமைச்சர் வன்னி அரசு மாணவர்களிடம்வீடியோ காலில் அழைத்து பேசியுள்ளார்.

விடுதிகளில் மீறும் உணவு மறுநாள் டிஸ்போஸ் செய்யப்பட்டு வந்தது. இனி மாவட்டத்தில் உள்ள அனைத்து விடுதிகளிலும் மீறும் உணவுகளை உடனடியாக அப்போதே டிஸ்போஸ் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்றார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (24.08.2026) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உள்ளார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (24.08.2026) கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கூரபாளையம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சியினை (22.08.2026) அன்று பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (24.08.2026) கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்டம் சித்தோடு ஸ்ரீகஞ்சமலை சித்தர் சன்மார்க்க சங்கம் மற்றும் வீத லீடார்ஸ் அமைப்பு இணைந்து, நேற்று (24.08.2026) ஈரோடு அரசு மருத்துவமனை புறநோயாளிகளுக்கு அன்னதானம் வழங்கினர்.நிகழ்வில் வீ த லீடார்ஸ் தன்னார்வலர்கள் அண்ணாதுரை எனும் கௌசிகன், த.அ. சுபஸ்ரீ, பிரபு மற்றும் சன்மார்க்க சங்க நிர்வாகிகள் செல்லதுரை, நந்தகுமார், சாமிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம், வாய்க்கால்மேடு, நந்தா பொறியியல் கல்லூரியில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் 2026 யை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, நேற்று (24.08.2026) துவக்கி வைத்து பள்ளி மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சியினை பார்வையிட்டார். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

# கோ சாலையில் பதுங்கியிருந்த கொடிய விஷப்பாம்பு — பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு



ஈரோடு மாநகர் கோட்டை அருள்மிகு ஸ்ரீ ஆருத்ரா கபாலீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள கோ சாலையில், 23.08.2026 அன்று பசுவிற்கு வைக்கோல் போடுவதற்காக குருக்கள் வைக்கோல் எடுக்கும்போது, அதற்குள் சுமார் 5 முதல் 6 அடி நீளம் கொண்ட கொடிய விஷத்தன்மையுள்ள பாம்பு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதையடுத்து கோயில் நிர்வாகம் சார்பில் உடனடியாக பாம்பு பிடி வீரர் யுவராஜுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த யுவராஜ், வைக்கோல் கட்டுகளுக்கு இடையில் பதுங்கியிருந்த கொடிய விஷத்தன்மை கொண்ட கோதுமை நாகம் என அடையாளம் காணப்பட்ட பாம்பை லாவகமாகப் பிடித்தார்.

பின்னர் வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களின் அறிவுறுத்தலின்படி பாம்பு பாதுகாப்பாக வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டது.

கோசாலையில் இருந்த கொடிய விஷப்பாம்பை உரிய நேரத்தில் பிடித்ததன் மூலம் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இதுகுறித்த தகவல் அறிந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள், துரிதமாக செயல்பட்டு பாம்பை பாதுகாப்பாக மீட்ட பாம்பு பிடி வீரர் யுவராஜுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

# பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்பட்டது முதலமைச்சர் விஜய் அறிவிப்பு



சென்னை: பரந்தூர் விமான நிலையம் திட்டம் கைவிடப்படும் எனவும், அதற்கு பதிலாக மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஐந்தாவது பயணிகள் முனையம் அமைக்கப்படும் என்றும் முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதம் கடந்த ஆகஸ்ட் 17ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (ஆகஸ்ட் 24) மீண்டும் சட்டப்பேரவைத் தொடங்கியது.

அப்போது, சட்டப்பேரவை 110 விதியின் கீழ் முதலமைச்சர் விஜய் சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். அந்தவகையில், பரந்தூரில் புதிதாக அமைக்கப்பட இருந்த விமான நிலைய திட்டம் கைவிடப்படும் என அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, "மீனம்பாக்கம் விமான நிலையம் ஆண்டுக்கு 30 மில்லியன் பயணிகளை கையாளும் திறன் கொண்டதாக உள்ளது. புதிய விமான நிலையங்கள் தேர்வு செய்யும் இடங்கள் பெரிய அளவில் விவசாயிகளை பாதிக்காத வகையிலும் குடியிருப்புகள் அகற்றாத வகையிலும், இருக்க வேண்டும். ய தி.மு.க அரசு விவசாயிகளை பெரிய அளவில் பாதிக்கும் வகையிலும் குடியிருப்புகளை அதிகளவில் அகற்றும் வகையிலும் விமான நிலையத்தை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இந்த சூழலில் மக்களின் போராட்டத்தைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே நான் உறுதி அளித்தவாறு பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்த அரசால் கைவிடப்படும்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "துறை சார்ந்த வல்லுனர்கள், கல்வியாளர்கள் ஆகியோர்களிடம் கலந்து ஆலோசித்து விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாதவாறு புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான சில மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவ்விடங்களில் தொழில்நுட்ப ரீதியான சாத்திய கூறுகளை சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு புதிய விமான நிலையத்திற்கான இடம் விரைவில் இறுதி செய்யப்படும்.

இதற்கு இடையே சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்து அதன் வடமேற்கு பகுதியில் ஆண்டுக்கு கூடுதலாக 20 மில்லியன் பயணிகளை கையாளக்கூடிய "டெர்மினல் 5" என்ற புதிய பயணிகள் முனையம் அமைக்க இந்திய விமான நிலைய ஆணையத்துடன் (Airports Authority of India – AAI) இணைந்து, அணுகுசாலை மற்றும் மேம்பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தற்போது நடைபெற்று வரும் 'டெர்மினல் 3' பயணிகள் முனையம் கட்டுமான பணிகள் முடிவுற்றபின் ஆண்டுக்கு 35 மில்லியன் பயணிகளை கையாளக் கூடியதாக இருக்கும்.

மேலும், புதிய டெர்மினல் 5 பயணிகள் முனையம் செயலாகத்திற்கு பிறகு ஆண்டுக்கு மொத்தம் 55 மில்லியன் பயணிகளை கையாளக் கூடியதாக விமான நிலையம் இருக்கும். இதன் மூலம் சென்னை விமான நிலையத்தின் சேவைகள் மேம்படுத்துப்படுவதோடு பயணிகளின் போக்குவரத்து தேவை புதிய விமான நிலையம் அமைக்கப்படும் வரை பூர்த்தி செய்யப்படும்" என்றார்.

இந்த அறிவிப்பை அடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்க்கு பூவுலகின் நண்பர்கள் நன்றி தெரிவித்து எக்ஸ் பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த பதிவில், "பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைப்பது தொடர்பான பணிகள் கைவிடப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார். தேர்தலுக்கு முந்தைய தனது நிலைப்பாட்டில் முதலமைச்சர் தனது உறுதிப்பாட்டைக் காத்துள்ளார்.

# CJP announces march from India Gate to Delhi Police HQ on Sept 5 over 'failed' govt promises: 'Good faith can't...'



The Cockroach Janta Party on Monday announced that it will hold a peaceful march from India Gate to Delhi Police Headquarters on September 5 over the government's failure to honour its July 25 commitments.

In a statement released after a key press meet, the party said the march will be led by families of deceased NEET victims and victims of alleged police brutality during the July 20 'Sansad Chalao' march.

"We announce a peaceful protest march from India Gate to the new Delhi Police Headquarters on 5 September, led by the families of the deceased NEET victims and victims of police brutality, and joined by students and young citizens from across the country," the statement read.

The announcement comes after the outfit's National Working Committee convened today (Monday) at 2 pm to review the Central government's alleged failure to fulfil commitments made to the country's youth, including assurances regarding the withdrawal or quashing of FIRs registered against students and protesters, as well as compensation for the families of deceased NEET victims. The outfit accused the government of playing games, hiding behind technicalities and avoiding giving clear commitments instead of implementing what was promised on July 25.

"For a month now, instead of implementing what was solemnly promised, the Government has played delay games, hidden behind technicalities, and avoided giving clear commitments even before the Supreme Court of India," the statement read.

It alleged that the union government refused to give a commitment in response to the Supreme Court's directive to provide a list of FIRs registered across the country so that the Court could consider quashing them together, at one go.

"On 18 August, the Supreme Court repeatedly asked the Union Government to provide a list of FIRs registered across the country so that the Court could consider quashing them together, at one go, making the commitment easiest to fulfil. Yet, the Government refused to give a clear commitment to do so. The written assurance from the Government to the CJP is also due."



ஈரோடு மாவட்டம், வாய்க்கால்மேடு, நந்தா பொறியியல் கல்லூரியில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் 2026 யை மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி, நேற்று (24.08.2026) துவக்கி வைத்தார். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

# கொளத்தூரில் தவெகவின் வி.எஸ்.பாபு வெற்றிப் பெற்றதை எதிர்த்து மு.க.ஸ்டாலின் தேர்தல் வழக்கு



கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பயன்படுத்தப்பட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வு செய்ய தேர்தல் ஆணையத்தின் அனுமதி கேட்கப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெற்றவுடன், அதன் அடிப்படையில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையிலான வழக்கறிஞர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் வைக்கப்பட்டிருந்த வாக்குப்பதிவு இயந்திரங்களை ஆய்வு செய்துள்ளனர்.

குறிப்பாக 1, 17,28 ,32 ,75 ,78, 79 ,84 ,87, 112, 122 157, 170 உள்ளிட்ட வாக்கு சாவடிகளில் வைக்கப்பட்டிருந்த வாக்கு ஒப்புகைச் சீட்டு இயந்திரமான விவி பேட் இயந்திரம், வாக்குப் பதிவு இயந்திரம், கண்ட்ரோல் யூனிட் ஆகியவற்றை அவர்கள் ஆய்வு செய்தனர். அப்போது, பெல் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட பொறியாளர்கள் உடன் இருந்துள்ளனர். விவிபேட் இயந்திரங்களுடன் வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் நூறு சதவீதம் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டன.

அவற்றில், 6 வாக்குச் சாவடிகளில் பதிவான வாக்குகள் மற்றும் விவி பேட் ஒப்புகைசீட்டுகளை ஒப்பிட்டுப் பார்த்ததில், பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இதுகுறித்து அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் பிரதிநிதி, சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எனவே, தேர்தல் இயந்திரத்தில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து புகார் செய்வது தொடர்பான வெளிப்படையான ஒரு நடைமுறையை அமல்படுத்த உத்தரவிட வேண்டும். பல வாக்குசாவடிகளில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டு முறைகேடு நடந்துள்ளது.

குறிப்பாக,ப வாக்குப்பதிவு இயந்திரங்களில் மென்பொருள் கோளாறு ஏற்பட்டுள்ளது.தொழில்நுட்பகோளாறுகளை சுட்டிக்காட்டிய பின்பும், சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளின் உரிய வழிகாட்டு நெறிமுறைகளின் படிதான் சோதனை மற்றும் சரிபார்த்தல் நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு வெற்றி பெற்றது செல்லாது என அறிவித்து, நான் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டும்" என்று அந்த மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தவழக்கு,தலைமை நீதிபதி அமர்வில் விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'தேர்தல் வழக்குகள் முடியும் வரை தமிழகத்தின் 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் இல்லை'




சென்னை: தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை என சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில், இருதொகுதிகளில் போட்டியிட்ட முதல்வர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்தார். அதேபோல, கரூர் தொகுதி எம்.எல்.ஏ. எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை தொகுதி எம்.எல்.ஏ. சி.விஜயபாஸ்கர், பெருந்துறை எம்.எல்.ஏ. ஜெயக்குமார், அம்பாசமுத்திரம் எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா செய்துள்ளனர்.

இவர்களின் வெற்றியை எதிர்த்த தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளபோது, இந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், ஐந்து தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதித்து, இந்திய தேர்தல் ஆணையம், மத்திய அரசு, சட்டப்பேரவை செயலாளர், முதல்வர் விஜய், எம்.எல்.ஏ.-க்கள் எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.விஜயபாஸ்கர், ஜெயக்குமார், இசக்கி சுப்பையா உள்ளிட்டோர் மூன்று வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த தடையை நீக்கக் கோரி கரூர் முன்னாள் எம்எல்.ஏ. எம்.ஆர்.விஜயபாஸ்கர், விராலிமலை முன்னாள் எம்.எல்.ஏ. சி.விஜயபாஸ்கர் தரப்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு முன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.நீதிமன்ற உத்தரவின்படி, தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த பதில் தவறு என முதல் விஜய் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தமிழக அரசுத் தரப்பில், ஐந்து தொகுதிகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால், இந்த வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. திருச்சி கிழக்கு தொகுதி திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜ் உள்ளிட்டோர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை செப்டம்பர் 8-ஆம் தேதிக்கு தள்ளிவைத்தனர். அதுவரை, ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீட்டித்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.